# உதயன்

விலை ரூபா 6-00

மலர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 வைகாசி 20 (03-06-1998) புதன்கிழமை UTHAYAN – [illegible] National Tamil Daily கதிர்:160

# புங்குடுதீவு ஊடாக வேறு தீவுகளுக்கு செல்லத் தடை!

## நாளை முதல் புதிய நடைமுறை அமுல்

யாழ்ப்பாணம், ஜூன் 3

நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு ஆகிய தீவுகளுக்குச் செல்லும் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் மற்றும் ஏனையோர் இனி புங்குடுதீவு, குறிகாட்டுவான் ஊடாகச் செல்லமுடியாது.

ஊர்காவற்றுறை சென்று அங்கிருந்தே மேற் குறிப்பிட்ட தீவுகளுக்குச் செல்ல முடியும். அவர்கள் திரும்பி வரும் போதும் ஊர்காவற்றுறை ஊடாகவே திரும்பி வரவேண்டும்.

இந்த நடைமுறை நாளை 4ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக பலாலி ராணுவ தலைமையகம் நேற்று நள்

(10ஆம் பக்கம் பார்க்க)

# புல்மோட்டைக் கடலில் படையினர் துப்பாக்கிச் சூடு

## முஸ்லிம் மீனவர் உயிரிழப்பு

திருகோணமலை, ஜூன் 3

புல்மோட்டைக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் மீது கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் முஸ்லிம் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்; மூன்று மீனவர்கள் பற்றித் தகவல் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த யூசுப் அலி என்ற மீனவரின் சடலம் நேற்று திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டு விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

காணாமற்போன மூன்று மீனவர்களையும் தேடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புல்மோட்டைக் கடற்பகுதி தடைசெய்யப்பட்ட பிரதேசம் எனப் படையினர் தெரிவிக்கின்றனர். (இ-3)

# சீருடை தரித்த ஆயுதக் குழுவினர் கதிர்காமம் பகுதியில் அட்டகாசம்!

## ராணுவ ஜீப் மீது தாக்குதல் ஏழு வாகனங்கள் எரிப்பு

கொழும்பு, ஜூன் 3

மொனறாகல மாவட்டம் புத்தல - கதிர்காமம் வீதியில் சென்று கொண்டிருந்த இராணுவ ஜீப் ஒன்றின் மீது இனந்தெரியாத குழு ஒன்று நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தியது. அத்துடன் அந்த வீதியால் சென்று கொண்டிருந்த ஏழு வாகனங்கள் வழிமறிக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டதுடன் அவை தீக்கிரையாக்கப்பட்டன.

புத்தல — கதிர்காமம் வீதியில் புத்தல இராணுவச் சோதனை நிலையத்தில் பணியாற்றும் இராணுவத்தினருக்கு உணவு வழங்கிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் அந்த ஜீப்பில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். ஜீப்பின் சாரதி உட்பட 7 பேர் காயமடைந்தனர். ஜீப்பும் சேதமடைந்தது.

இராணுவச் சீருடை தரித்த

(10ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிப் போர் முனையில் தளபதிகளுடன் அனுருத்த

கொழும்பு, ஜூன் 3

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ் மா அதிபர் சகிதம் நேற்றுப் போர் முனைக்கு விஜயம் மேற்கொண்டார்,

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தளபதிகளுடன் கலந்துரையாடி தள நிலைமையை அவர் கேட்டறிந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# குண்டு வெடிப்பை அடுத்து ஹட்டனில் தேடுதல்

கொழும்பு, ஜூன் 3

ஹட்டனில் உள்ள செனன் தோட்டத்தில் உள்ள தேயிலைத் தொழிற்சாலையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து நேற்று அங்கு பொலீஸார் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அங்குள்ள தமிழர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-3)

# கூட்டணி உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்

## அவரின் இடத்துக்கு புதியவர்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். மாநகரசபையின் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பான உறுப்பினராக எஸ். அரவிந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநகர சபையின் உறுப்பினராகப் பணியாற்றிய திருமதி டெனிற்றா எஸ்பிரியல் பதவி விலகியதையடுத்தே அவரது இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (இ-3)

# கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 3

யாழ். மேயர் திருமதி சறோஜினிதேவி யோகேஸ்வரனின் படுகொலை மற்றும் அரச பயங்கரவாதம் ஆகியவற்றைக் கண்டித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

பம்பலப்பிட்டி கற்பகம் கட்டடத்துக்கு முன்பாக இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை மோர்ஜ் அமைப்பும், பெண்களுக்கான கூட்டமைப்பும் ஏற்பாடு செய்திருந்தன. (இ-3)

# ரெலிகொம் பரிவர்த்தனை நிலையத்துக்கு பாதுகாப்பு

## மங்கள சமரவீர கோரிக்கை

கொழும்பு, ஜூன் 3

ஸ்ரீலங்கா ரெலிகொம் பரிவர்த்தனை நிலையங்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர கேட்டுள்ளார்.

இது தொடர்பாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தவுடன் அவர் தொடர்பு கொண்டுள்ளார்.

(10 ஆம்பக்கம் பார்க்க)

# புலிகளின் நிலைகளைத் தேடி அழிக்க திருமலை வடக்கே படை நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜூன் 3

விடுதலைப் புலிகளின் நிலைகளைத் தேடி அழிப்பதற்கான இராணுவ நடவடிக்கை ஒன்று நேற்று திருகோணமலைக்கு வடக்கே மேற்கொள்ளப்பட்டது.

''ஜயபூமி'' என்ற மேற்படி இராணுவ நடவடிக்கை குச்சவெளி முதல் புல்மோட்டை வரையிலான பிரதேசங்களில் இடம்பெற்றது.

ஏற்கனவே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினரொருவரால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் இந் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகளின் பிரதான உணவு, மருந்து விநியோக தளங்கள் திரியாய், கல்மடு, பெரிய கராச்சி ஆகிய இடங்களில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் இரு இளைஞர்கள் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஜூன் 3

மட்டக்களப்பு— கல்முனை வீதி, பெரியநிலாவணையில் நேற்றுமாலை 6-30 மணியளவில் இரு இளைஞர்கள் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள் கல்முனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச் செய்தி எழுதப்படும் வரை மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை. (இ-21)

# குருநகர் சம்பவம் குறித்து படை தரப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 3

குருநகர் சவக்காலைச் சந்தி சோதனை முகாம் சம்பவம் குறித்து பலாலி இராணுவத் தலைமையகம் நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மே மாதம் 30ஆம் திகதி பிற்பகல் 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் குருநகரில் உள்ளகுறிப்பிட்ட சோதனை முகாமுக்கு 2 யுவதிகள் வந்தனர்.

சோதனை முகாமில் இராணுவத்தினரே கடமையில் ஈடுபட்டிருந்தனர். இருயுவதிகளையும் சோதனையிட

(9 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையினர் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை கணேசலிங்கம்

(கணேஸ் மாமா)

செல்வம் மில் லேன், இமையாணன் உடுப்பிட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கணேசலிங்கம் (படப்பிடிப்பாளர்) 2-6-98 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் திருமதி சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், சிவாஜினியின் அன்புக் கணவரும், வைதேகி, விதுர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கம் (கிராம சேவையாளர், மருதடி லேன், யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற இராசலிங்கம், சந்திரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-6-98) புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ். மகாலிங்கம்
(சகோதரர்)

செல்வம் மில் லேன்,
இமையாணன், உடுப்பிட்டி.

(56517)

## செல்லத்துரை ஞானசேகரம்பிள்ளை

(ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர், யாழ்ப்பாணம்.)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமானசெல்லத்துரைஞானசேகரம்பிள்ளை (30-05-98) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கப்பிள்ளையின் அன்பு மகனும், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற சரஸ்வதியின் மூத்த மருமகனும், கௌசலாதேவியின் அன்புக் கணவரும், தட்ஷாயினியின் பாசமிகு தந்தையும், கமலாதேவி, ஞானகணேசன், பாலகணேசன், ஆனந்தகணேசன் ஆகியோரின் சகோதரரும், சிவநாதன், சண்முகநாதன், செல்வக்காந்தன், சுபத்திராதேவி, சுசிலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரின் இறுதிச் சடங்குகள் கொழும்பில் 1-6-98 அன்று காலை 10-00 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கௌசலாதேவி (மனைவி)
தட்ஷாயினி (மகள்)

(56512)

## சின்னையா துரைச்சாமி

ஓய்வுபெற்ற பிரதம லிகிதரும் (Police Department), அரியாலை ஸ்ரீ சத்தியசாயி பாபா சேவா நிறுவனச் செயலாளருமான சின்னையா துரைச்சாமி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா – சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், பானுமதியின் அன்புக் கணவரும், Dr. ரவிச்சந்திரன், Dr. ஹேமநளினி, யசோதா, விஜிதா, அனுஷா, சரத்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலச்சந்திரன், Dr. அசோகன், Dr. வசந்தி, ஜெயச்சந்திரன், பிரேமினி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற மனோன்மணியின் சகோதரனும், விசுவநாதன், சந்திரா, குகநாதன், காலஞ்சென்ற இராசையா ஆகியோரின் மைத்துனரும், சாம்பவி, மயூரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03 - 06 - 1998) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு 46, கலைமகள் வீதியில் இருக்கும் அவரது இல்லத்திலிருந்து அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
சி. சிவராசா
(மைத்துனர்)

(56519)

## ஆறுமுகம்பிள்ளை சத்தியநாராயணன்

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம்பிள்ளை சத்தியநாராயணன் பிலிப்பீன்ஸில் 01-06-98 இல் காலமானார்.

அன்னார் திரு சின்னத்தம்பி ஆறுமுகம்பிள்ளை (இளைப்பாறிய போதனாசிரியர், நல்லூர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை) திருமதி சிவயோகம் ஆறுமுகம்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், திருமதி யாழினியின் (கனடா) அன்புக்கணவரும், நினுஜா, ஹனிஜா ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி சத்தியதேவி சிவானந்தராஜா (கனடா), திரு. சத்தியசீலன் (இந்தியா), திரு சத்தியமூர்த்தி (மக்கள் வங்கி, சுன்னாகம்), திருமதி சத்தியகௌரி தயாளன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06-06-98 அன்று பிலிப்பீன்ஸில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. சத்தியமூர்த்தி

இல. 251/2,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(56516)


A/L
PAPER CLASSES
கலைப்பிரிவு
தமிழ்
Mr. அருள்
O/L DAY CLASS
கணிதம்
Mr. தயாளன்
விஞ்ஞானம்
Mr. சந்திரன்
Yr. 10, 9 & 8
SHAMROCK
(56521)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
03-06-98 புதன்
அகல வெண் திரையில்
கமல், அர்ஜுன்
கௌதமி நடித்த
குருதிப்புனல்
புரட்சிகர வெளியீடு
அடுத்த வெளியீடு
04-06-98 முதல்
M.G R. (இரு வேடம்)
எங்கவீட்டுப் பிள்ளை
காட்சிகள்:- 10-30, 2-30
(56523)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
TITANIC
Part I & II ஒரே தடவையில்
காண்பிக்கப்படும்
வியாழன், வெள்ளி
விஜய் - விஜயகாந்த்
கௌதமி நடித்த
செந்தூரபாண்டி
நேரம்:- 10.00, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56294)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
கடைசி வாரமாக
கார்த்திக், சௌந்தர்யா
நடித்த
பொன்னு மணி
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3905)

யாழ்.
றீகல் வெண் திரையில்
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
காட்சிகள்:- 10-30 — 2-30
மம்முட்டி - அஞ்சு
நடித்த
சத்திரியவம்சம்
(நெஞ்சை உருக்கும் காட்சிகள்)
தினசரி 5-00 மணிக்கு
WING CHNN
(கராட்டிச் சித்திரம்)
பார்க்கத் தவறாதீர்கள்
(56534)


## உடற்பயிற்சிப் போட்டி

யாழ்ப்பாணம். ஜூன் 3 சங்கானைக் கல்விக் கோட்ட உடற்பயிற்சிப் போட்டியில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பெண்கள் அணி முதலாம் இடத்தையும், ஆண்கள் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

(ஐ-5)

## கண்ணீர் பூக்கள்

செல்வன்

### திருநாவுக்கரசு லவக்குமார்

எம்முடன் கல்வி பயின்ற
தி. லவக்குமார் (6 B)
என்ற மொட்டு மலர்ந்து
மணம் பரப்பும் முன்னே
கருகி வீழ்ந்து மடிந்தது
இவன் பிரிவால்
கண்ணீர்ப்பூக்களைக்
காணிக்கையாக்கும்

ஆண்டு 6 மாணவர்கள்,
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

[56527]

## கண்ணீர் அஞ்சலி

வேலணை பிரதேச சபையில் கடமையாற்றும் எமது சக உத்தியோகத்தரான திருமதி நவநீதரம்பை சச்சிதானந்தம் (எழுதுநர்) அவர்களின் அன்புக் கணவர்

### சின்னத்துரை சச்சிதானந்தம்

அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வேலணைப் பிரதேச சபை.

(56528)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர்

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் அம்பலவாணரின் (சட்டத்தரணி) பாரியார் அ. புவனேஸ்வரி நேற்று கொழும்பில் காலமானார் அவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு. அம்பலவாணர்
(சட்டத்தரணி)

புத்தூர் கிழக்கு.

(56526)

## திருமதி புனிதவதி செல்வராசா

திருமதி புனிதவதி செல்வராசா காலமானார்.

இவர் உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் லிகிதரும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி உப அதிபர் கதிர்காமு செல்வராசாவின் அருமை மனைவியும், அராலி மேற்கு திரு. திருமதி இரத்தினசிங்கத்தின் மகளும், சச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த திருமதி ஞானதேவி வீரகத்திப்பிள்ளை (ஆசிரியை, இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), இரத்தினரூபன், சிவரூபன் ஆகியோரின் சகோதரியும், பத்மினி (மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்), விஜயராசா (வர்த்தக வங்கி, கொழும்பு), பவானி (வடமராட்சி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும், வதிரி திருமதி சொர்ணம்மா கிருஷ்ணபிள்ளையின் பெறாமகளும், சட்டத்தரணி சி. வீரகத்திப்பிள்ளையின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (04-06-98) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வதிரியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. செல்வராசா
(கணவர்)

வதிரி, கரவெட்டி.

(56524)


சோதி புடவையகம்
மங்கள வைபவங்களுக்கேற்ற
பட்டுப் புடைவைகள், சாறிகள், சேட்டுக்கள்
மற்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பட்டுப் புடைவைகளுக்கும், பல சாறி வகைகளுக்கும்
நாட வேண்டிய ஒரே இடம்
சோதி புடவையகம்
14, நவீன சந்தை,
யாழ்ப்பாணம். T. P. No. 2139
(56522)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவுண்டா விடுதலை!

லுசாக்கா, ஜூன் 3

ஸம்பியாவின் முன்னாள் அதிபர் கெனத் கவுண்டா மீது சுமத்தப்பட்ட தேச விரோதக் குற்றச்சாட்டுக்களை அரசு விலக்கிக் கொண்டதை அடுத்து லுசாக்கா உயர் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

ஸம்பியாவில் அதிபர் பிரிட்றிக் லிசூபாவின் அரசுக்கு எதிராக கடந்த ஆண்டு ஒக்ரோபரில் மேற்கொள்ளப்பட்ட சதிப்புரட்சி குறித்து முன்னாள் அதிபர் கவுண்டா முன்கூட்டியே தெரிந்திருந்தார் என்று குற்றஞ்சாட்டிய அரச தரப்பு சட்ட நிபுணர்கள் திடீரென அவர் மீதான வழக்குகளை விலக்கிக் கொண்டதை அடுத்தே லுசாக்கா உயர் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது

அவர் மீதான வழக்குகள் திடீரென விலக்கப்பட்டதற்கான காரணம் தெரியவரவில்லை.

இதற்கிடையில் —

கவுண்டா விவகாரத்தில் தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தலையிட்டதைத் தொடர்ந்தே அவர் விடுவிக்கப்பட்டதாக வெளியான தகவல்களை தென்னாபிரிக்க அரசு ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ இல்லை.

(ஐ-8)

## உலக உதைபந்தாட்டம் ஆரம்பிக்கும் வேளையில்

# பிரான்ஸில் விமானிகள் திடீர் வேலை நிறுத்தம்!

பாரிஸ், ஜூன் 3

பிரான்ஸின் தேசிய விமான சேவையான 'எயர் பிரான்ஸின் 'விமானிகள் வேலை நிறுத்தத்தில் குதித்திருப்பதை அடுத்து நாட்டில் விமான் சேவைகள் முற்றாகச் செயலிழந்துள்ளன.

இந்த திடீர் விமானசேவை நிறுத்தம் காரணமாக பிரான்ஸின் முக்கிய சில நகரங்களில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள 16 ஆவது உலகக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிககுப் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'எயர் பிரான்ஸின்' சுமார் 3 ஆயிரத்து 200 விமானிகள் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

விமான சேவையை விஸ்தரித்து அபிவிருத்தி செய்யும் நோக்குடன் விமான் நிறுவனம் தயாரித்த ஒரு திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின்படிவிமானிகளின ஓர் ஆண்டு சம்பளத்தில் மொத்தமாக 500 மில்லியன் பிராங்குகள் வெட்டப்படவுள்ளது. இவ்வாறு வெட்டப்படும் நிதி மூலம் பாரிஸ் நகரில் உள்ள விமான நிலையங்களில் ஓடு பாதைகளை நவீனமயப்படுத்தவும், புதிதாக 70 விமானங்களை வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

அடையாள வேலை நிறுத்தத்தை ஜூன் முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை நடத்தவும் பின்னர் தொடர்ந்து இரண்டு வார காலத்துக்கு கட்டங் கட்டமாக அதனை நீடிக்கவும் விமானிகள் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து 85 வீதமான விமான சேவைகள் செயலிழந்தன. ஆனால் வெளிநாட்டு விமான சேவைகள் பாதிக்கப்படவில்லை.

எதிர்வரும் 10 ஆம் திகதி மிகக் கோலாகலமான முறையில் ஆரம்பமாகி ஒரு மாத காலத்துக்கு நடைபெறவுள்ள உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை இந்த வேலை நிறுத்தப் போராட்டம் மிகவும் பாதிக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

32 நாடுகளில் இருந்து வரவுள்ள விளையாட்டு வீரர்களையும், நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இருந்து வரும் பல லட்சம் ரசிகர்களையும் ஏற்றிவர 'எயர் பிரான்ஸ்' நிறுவனம் அவசர மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

(ஐ)



விமானிகளின் வேலை நிறுத்தத்தை அடுத்து சார்ள்ஸ் டி குவலா விமான தளத்தில் தரித்து நிற்கும் 'எயர் பிரான்ஸ்' விமானசேவை விமானங்கள். (படம்:றோய்ட்டர்)

# இந்தியாவில் கோடை வெயிலுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலி!

புதுடில்லி ஜூன் 3

கோடையின் கொடுமைக்கு இந்தியா முழுவதிலும் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியாகி விட்டனர்.

சூரியனுக்குக் கோவில் அமைத்துள்ள ஒரிசா மாநிலத்தில் மட்டும் ஒரே நேரத்தில் மொத்தம் 361 பேர் இறந்தனர். ஆனால், அங்கு 400-க்கும் மேற்பட்டோர் இறந்ததாக ஒரு தகவல் தெரிவிக்கிறது.

நாட்டின் பல மாநிலங்களில் ஞாயிற்றுக்கிழமை மட்டும் மொத்தம் நூறு பேர் உயிரிழந்தனர். ஒரிசாவில் கடந்த 24 மணி நேரத்தில் மொத்தம் 78 பேர் இறந்தனர்.

ஒரிசாவின் மேற்குப் பகுதியிலுள்ள சம்பல்பூர் மாவட்டத்தில் 86 பேரும், கட்டாக் பகுதியில் 70 பேரும் உயிரிழந்தனர். புவனேசுவரத்தில் கடந்த 24 மணி நேரத்தில் நான்கு பேர் பலியாகினர். இங்கு உயிரிழந்த மொத்த நபர்களின எண்ணிக்கை 22. தென்கனல் மாவட்டத்தில் 66 பேரும்,போலாங்கீர், கந்தர்கார்க் மாவட்டங்களில் தலா 40 பேரும் உயிரிழந்தனர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் கடந்த ஒரு வாரத்தில் அனல் காற்றுக்குப் பலியானோரின் எண்ணிக்கை 222 ஆக அதிகரித்துள்ளது.

பிகாரில் வெயில் கொடுமை தாங்காமல் கடந்த ஒருவாரத்தில் பலியானோரின் எண்ணிக்கை 75 ஆக உயர்ந்தது.

(ஐ)

# முக்கிய வீதிகள், ரயிற்பாலங்கள் அஸாமில் குண்டு வைத்து தகர்ப்பு!

## போடோ தீவிரவாதிகள் கைவரிசை

கௌஹாத்தி, ஜூன் 3

இந்தியாவின் அஸாம் மாநிலத்தின் பல இடங்களில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் பல முக்கிய வீதிகள், ரயில் பாலங்கள் என்பன தகர்க்கப்பட்டுள்ளன.

இதனால் வடகிழக்குப் பிராந்தியத்துக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான தகவல் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. ரயில் சேவைகளும் தடைப்பட்டுப் போயுள்ளன.

'போடோ' தீவிரவாதிகளே இத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல பாலங்கள் முற்றாகத் தகர்க்கப்பட்டன. ரயிற் பாதை தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டது. தகவல் தொடர்பை சீராக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதாக நேற்று நண்பகல் அறிவிக்கப்பட்டது. (ஐ-8)

## பிறந்த பதியிலும் சிறந்ததொன்றில்லை

இலங்கையில் இனப்பிரச்சினையால் உலகின் பல பாகங்களுக்கும் தமிழ் மக்கள் சிதறி வாழ்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஈழத்து மண்ணின் வாசங்களை எழுத்து உருவில் கொண்டு வருவது வரலாற்றுக் கடமையாகும். இதனைக் கருத்திற் கொண்டு ஈழத்தில் உள்ள ஒவ்வொரு சிறிய கிராமங்கள், நகரங்கள் பற்றிய கட்டுரைகளை படங்களுடன் சேர்த்து புத்தகமாக்க அனைவரும் முன் வரவேண்டும். மூன்று தரமான கட்டுரைகளுக்கு தலா $ 100. 00 கனடிய டொலர்கள் பரிசாகக் காத்திருக்கின்றன. கனடாவில் இயங்கும் ''தமிழன் வழிகாட்டி'' வெளியீட்டாளர்கள் இக் கட்டுரைகளை 'பிறந்த பதியிலும் சிறந்ததொன்றில்லை' எனும் நூலாக வெளியிட உள்ளனர். உங்கள் ஊர்களின் தொன்மை, பெருமை, வாழ்ந்த பெரியோர்களின் நினைவுகள், ஊரின் பாரம்பரியங்கள் மற்றும் உங்களுக்குத் தெரிந்தவற்றை எழுதி

ஜூலை 31-1998-க்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

ATHAVAN PUBLICATIONS INC.
371, ORTON PARK ROAD, UNIT 120,
SCARBOROUGH, ONTARIO,
CANADA, MIG 3VI.

[சி/3911]

# ஏவுகணையில் அணுகுண்டு

இஸ்லாமாபாத், ஜூன் 3

அணு ஆயுதங்களை நீண்ட தூரங்களுக்குச் சுமந்து செல்கின்ற புதிய ஏவுகணைத் தொழில்நுட்ப சக்தியினை உருவாக்கப் போவதாக பாகிஸ்தான் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

'ராஜா[illegible]' என்று இந்[illegible] வைக்கப்பட்டுள்ளது.

# ஆப்கன் பூகம்பத்தில் 5 ஆயிரம் பேர் பலி!

காபூல், ஜூன் 3

ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் சனிக்கிழமை ஏற்பட்ட மோசமான நில நடுக்கம் காரணமாக சுமார் 5 ஆயிரம் பேர் வரை உயிரிழந்து விட்டதாக ஆப்கன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐ. நாவும் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பிரதிநிதிகள் விமானங்களில் மருந்துப் பொருள்கள், அவசர உதவிப் பணியாளர்கள் சகிதம் இப்பகுதியைச் சென்றடைந்துள்ளனர்.

உயிர்பிழைத்தவர்களுக்கு என்ன உதவி தேவைப்படுகிறது என்பது பற்றி அறிதலே இப்பணியாளர்களின் முதல் நடவடிக்கையாக இருக்கும்.

கடந்த பெப்ரவரி மாதம் நிலநடுக்கம் ஏற்பட்ட ஆப்கானிஸ்தானின் அதே பகுதியிலேயே தற்பொழுதும் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சென்ற முறை ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். தற்போதைய நில நடுக்கத்தின் அளவும், பாதிக்கப்பட்ட பிரதேசமும் விசாலமாகவும் இருப்பதனால் முன்னரைவிட அதிகம் பேர் பலியாகியுள்ளனர்.

ஒதுக்குப் புறமான கிராமங்களுக்குச் சென்று உதவிகளை மேற்கொள்ள முடியாமல் வீதிகள் தகர்ந்துபோயுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிர் தப்பியவர்களுக்கு உதவி செய்வதற்காகப் பல உதவி நிறுவனங்கள் தற்பொழுதும் அங்கே இயங்கி வருவதால் துரிதமாக உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி வட்டி வீத வீழ்ச்சி:

# பங்குச் சந்தைகளை வாங்குவது குறித்து ஆய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 3

வங்கிகளின் வட்டி வீதங்கள் தற்பொழுது மிகவும் வீழ்ச்சியடைந்துவருகின்றன. இதனால் கொழும்பிலுள்ள மக்களில் அனேகமானோர் தமது பணத்தைப் பங்குச் சந்தைகளிலேயே முதலிட்டு அதிக பலன் பெற்றுவருகின்றனர்.

இந்த நடைமுறையை யாழ்ப்பாணத்திலே செயற்படுத்துவதற்ச் சாத்தியமாகுமா? என்பது பற்றி அறிய எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 30 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரியில் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தை வடமாகாண வங்கி ஒய்வூதியர்களின் நலன்புரிச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது. (ஐ-8)


**The Express Institute**

IRUPALAI · KOPAY

O\L DAY CLASSES

**ஜூன் 05 இல்**

ஆரம்பமாகிறது.

( காலை 8. 30 — பி. ப. 1. 30 )

★ மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- அதிபர்

(56508)


சங்கானை

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)

# பதவி வெற்றிடம்

## கணக்காளர் நிரந்தரம்

1. சம்பள அளவுத் திட்டம்: 104 / 09

$$\frac{3200 - 5200}{90 \times 10 - 110 \times 10}$$

2. மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகுதியுடைய ஆண்பாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தை தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்கு 30-06-1998 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைத்தல் வேண்டும். சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தில் மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் ரூ. 10 செலுத்தி சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3. தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/உட்துறைக் கணக்காய்வாளர் பதவியில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவமும் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11ஆவது சம்பளத் திட்டத்தில் உட்துறைக் கணக்காய்வாளர் / கணக்குப் பதிவாளர் / கணக்குத்துறை அல்லது கணக்காய்வுத்துறை எழுதுநர் பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

அல்லது

ஆ) ஐக்கிய ராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதி நிலைப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத் துறை/எண்பார்வைத் துறையில் மேற்பார்வைப் பதவியில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்), க. பொ. த. (உயர்தரத்தில்) கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களில் சித்தியும், கணக்குத் துறை/ எண்பார்வைத் துறையில் மேற்பார்வைப் பதவியில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

4. வயதெல்லை:

23 தொடக்கம் 40 வரை

5. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

தலைவர்,

சங்கானை ப. நோ. கூ. சங்கம்,

சங்கானை.

(சி-3908)

## தீவகத்துக்கு ஜெனரேட்டர்

தீவுப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கென யாழ். செயலகத்தில் வைக்கப்பட்டிருந்த 160 கே. வி வலுவுள்ள ஜெனரேட்டரொன்று தீவுப்பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

(ஐ-100)


**தேவை**

வலை அவிக்கும் கண்டல் பட்டைத் தூள் தொகையாக நல்ல விலைக்கு வாங்கப்படும்.

கை. இராமநாதன்,
No. 76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(56511)


யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
இலங்கை

## பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல் 1997

(கலாநிதி/ முதுமெய்யியல்மாணி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1996/ 1997 ஆம் கல்வியாண்டிற்கு பின்வரும் பாடநெறிகட்கு. பட்டப்பின் படிப்பிற்காகத் தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல் புவியியல், இந்துநாகரிகம், அரசியல். கிறிஸ்தவ நாகரிகம், வரலாறு, வர்த்தகம், தமிழ், மெய்யியல், சமஸ்கிருதம், மொழியியல், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், முகாமைத்துவம்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்களை நேரில் பெற விரும்புவோர் நிதிக்கிளையில் ரூபா 100 செலுத்திப் பற்றுச் சீட்டினைக் கல்விக்கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 100 இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் ரூபா 11-00 பெறுமதியுள்ள முத்திரை ஒட்டிச் சுயவிலாசமிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 1998 - 07 - 10 ஆம் திகதிக்கு முன்பாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர். கல்விக்கிளை, யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். 1998 - 07 - 10 ஆம் திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.
1998 - 05 - 29

(சி-3898)

இலங்கை வங்கி சுன்னாகத்தின்

ஆதரவில்

யா/யூனியன் கல்லூரி இன்ரறக்ட் கழகம்

நடத்தும்

பாடசாலைகளுக்கிடையிலான

## பொது அறிவுப் போட்டி

கீழ்ப்பிரிவு ஆண்டு 6, 7, 8
மத்திய பிரிவு ஆண்டு 9, 10, 11
மேற்பிரிவு ஆண்டு 12, 13

விண்ணப்பக் கட்டணம்: ரூபா 10
விண்ணப்ப முடிவு திகதி: 05-06-98

இடம்: யா/ யூனியன் கல்லூரி,
மருதனார்மடம்

நாள்: 09 - 06 - 1998

செயலாளர்
இன்ரறக்ட் கழகம்,
யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

[சி-3910[

## SUBRA கல்வி நிறுவனம்

சித்தன்கேணி

## வாழ்த்துகின்றோம்

1997 ஆம் ஆண்டு க. பொ. த. சா. பரீட்சையில் சித்திபெற்ற எமது நிறுவன மாணவர்களாகிய.

| | | | |
|---|---|---|---|
| கி. சஞ்சிவ் | — 6 D | C | S |
| த. அஜந்தினி | — 6 D | C | |
| ம. கோகுலன் | — 5 D | 3 C | |
| த நிசாந்தினி | — 5 D | 2 C | |
| அ. அருண் | — 5 D | C | 2 S |
| அ. சிவரூபன் | — 3 D | 3 C | 2 S |
| கி. மதிவதனி | — 3 D | 4 C | |

ஆகியோரையும் சித்திபெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். (56475)

லயன்ஸ் கழகம்

மானிப்பாய்

(வட்டம்)



## கண் பரிசோதனை முகாம்

கண் வெண் விழிப்படலத்தினால் ('CATARACT') பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அதை அகற்றும் சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கான பரிசோதனை முகாம் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். குகதாசன் அவர்களால் நடத்துவதற்கு எங்களால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இடம்: சிந்மயபாரதி ஆரம்ப பாடசாலை
சுதுமலை

நாள்: 07 - 06 - 1998 (ஞாயிறு)
நேரம்: காலை 7-30 (புதிய நேரம்)

இப்பரிசோதனை முகாம் மூலம் பயன்பெற விரும்பும் 55 வயதிற்கு மேற்பட்டோர் பின்வருவோருடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

மானிப்பாய்: லயன் எஸ். மனோகரசீலன்
"சுரேக்கா ரெக்ஸ்"

சுதுமலை: லயன் C. பொன்னம்பலம்
குண்டடி வாசிகசாலை அருகில்

நவாலி: லயன் V. சிற்றம்பலம்
பிரசாத் வீதி, நவாலி

குறிப்பு: 5-4-1998 இல் பரிசோதிக்கப்பட்டு மூக்கு கண்ணாடிகளுக்கு சிபார்சு செய்யப்பட்ட வசதி குறைந்தவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள லயன் C. பொன்னம்பலம் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

லயன்
எஸ். எஸ். தங்கராசா
செயல்திட்ட தலைவர்

லயன்
ஏ. சி. செபநாயகம்
தலைவர்


விளம்பர அன்பளிப்பு:

**சுரேக்கா ரெக்ஸ் ஐ பான்ஸி**

மானிப்பாய் (சி/3906)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருநகர் தொடர்மாடிக் கட்டடங்கள்
# பலகாலமாகச் சேதமடைந்த நிலையில்
## அடிப்படை வசதிகளும் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 3
குருநகர்ப் பகுதியில் வசிக்கின்ற கடற்றொழிலாளர்களின் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் கட்டப்பட்ட ஐந்துமாடிக் கட்டடத்தொகுதி வீடுகள் தற்போது பெரும் சேதத்திற்கு உள்ளாகி இருப்பதுடன், அடிப்படைத் தேவைகள் அற்றதாகியும் காணப்படுகின்றது,

இக்கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள 160 வீடுகளில் 75 வீடுகளில மட்டுமே மக்கள் வசிக்கின்றனர். ஏனைய வீடுகளில் சில பாதுகாப்பு படையினரின் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ளன. ஏனையவை சில கூரைகள் அழிந்த நிலையிலும், அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும், கதவுகள், யன்னல்கள் இல்லாத நிலையிலும் காணப்படுகின்றன.

தண்ணீர்ப் பற்றாக்குறை, மலசலகூட வசதிஇன்மை என்பனவும் ஐந்துமாடிக் கட்டடத் தொகுதியில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளாகும்.

குருநகர்ப் பகுதி கடற்றொழிலாளர்களின் வீடில்லாப் பிரச்சினையைந் தீர்ப்பதானால்இந்த ஐந்துமாடிக் கட்டடங்களே முதலில் புனரமைக்கப்பட வேண்டியவை என இப்பகுதி அமைப்புக்கள் தெரிவித்தன. (ஐ-7)

## பாடசாலை கட்டட வேலை

ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுறவு நிறுவனம், (ஜி. ரீ. இ சற்) கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பித்த கட்டட வேலைகள் இவ் வருடம் செப்ரெம்பர் மாதத்தில் பூர்த்தியடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கட்டட வேலைகளுக்கான நிதியில் சுமார் 22 வீதம் இப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வழங்கியுள்ளது. (ஐ-5-109)

# ஆயிரத்து 500 வாளிகள் சமாசத்துக்கு வந்தன

அரியாலை, ஜூன் 3
யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவு நுகர்வோர் சமாசத்திற்கு கப்பல் மூலம் ஆயிரத்தி ஐநூறு வாளிகள் எடுத்துவரப பட்டுள்ளன.

சமாசத்திற்கு கப்பலில் எடுத்து வரப்பட்ட 37 வகையான பொருள்கள் தற்போது மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படடு வருகின்றன.

சவர்க்கார வகைகள், பால்மா வகைகள், சைக்கிள்கள் என்பனவும் இவற்றுள் அடங்கும். (ஐ-17)

# 89 தபாற் பொதிகள் கப்பலில் நேற்று வந்தன

அரியாலை, ஜூன் 3
கொழும்பில் இருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் 89 வெளியூர்த் தபாற் பொதிகள் யாழ். பிரதம தபாலகத்திற்கு நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன,

இங்கிருந்து 31 தபாற் பொதிகளும், 30 வீடியோ நாடாக்களும் இக் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாகப் பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

கப்பலில் எடுத்துவரப்பட்ட தபாற் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு இன்று முதல் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (ஐ-17)


தென்மராட்சி மக்களின் நலன் கருதி
27-05-98 புதன் முதல்
கலர்ப்படச் சுருள்களின் முகவராக

**டெல்கா DELKA**

ஸ்தாபனத்தாரை நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**டெல்கா DELKA**

பஸ் நிலையம், சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்)

தலைமையகம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(நாகவிகாரை முன்பாக)

கட்டணங்களில் மாற்றமில்லை

(சி/3894)


# திருமலையிலிருந்து மண்வெட்டிப் பிடி

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ்ப்பாண விவசாயிகளின் நன்மை கருதி திருகோணமலையில் இருந்து முதிரை மர மண்வெட்டிப் பிடிகள் எடுத்து வரப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை கமநலச்சேவைகள் உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் மேற்கொண்டு வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் முதிரை மர மண்வெட்டிப் பிடிகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்தே இவற்றை திருகோணமலையில் இருந்து கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

## நெல்லியடி சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 3
நெல்லியடிச் சந்திக்குத் தெற்கே அமைந்துள்ள இராஜ கிராமம்பகுதி நேற்று முன்தினம் காலை 5.00 மணி முதல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

அதிகாலை 4 மணி முதல் இச் சுற்றி வளைப்பு பற்றி படையினரால் ஒலிபெருக்கி மூலம் மக்களுக்குக் கூறப்பட்டது.

பின்னர் பொதுமக்கள் கரவெட்டி திரு இருதயக் கல்லூரிக்கு அழைக்கப்பட்டு தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (இ-7)

## சடலம் கரை ஒதுங்கியது

கொழும்பு, ஜூன் 3
அழுத்கம கடலில் ஞாயிறன்று மூழ்கிய விசேட அதிரடிப்படையின் பிரதம கட்டளையிடும் அதிகாரியான பிரதி பொலீஸ்மா அதிபர் தர்மதாஸ வீரக்கோனின் சடலம் நேற்று முன்தினம் காலை மீட்கப்பட்டது.

களுத்துறை கரையோரம் சடலம் கரை ஒதுங்கியிருந்தது. (இ-21)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

தெல்லிப்பழை பிரதேசச் செயலர் பிரிவில் இதுவரை மீளக்குடியேற அனுமதிக்கப்படாத பகுதிகளில் வீடமைப்புக் கடன் பெற்றவர்கள் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட முகாமையாளர் எஸ். மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்டவர்கள் தெல்லிப்பழைப் பிரதேசச் செயலரின் செயலகத்திலுள்ள வீடமைப்புத் திணைக்களத் தொழில் நுட்ப உத்தியோகத்தருடனும தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)


**கடை விற்பனைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் உள்ள கடை ஒன்று விற்பனைக்கு உண்டு. வேண்டுவோர் நேரடித் தொடர்புக்கு:
சிவசம்பு ஸ்ரோர்ஸ்,
03, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(56505)


# கொழும்புத்துறை வாலிபர் வேலணையில் கைது

யாழ்ப்பாணம். ஜூன் 3
கொழும்புத்துறை இளைஞர் ஒருவர் வேலணையில் வைத்து கடந்த 26ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மரியதாஸ் ராஜ்குமார் (20 வயது) என்ற இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

ஊர்காவற்றுறையில் உள்ள தனது உறவினரிடம் பணம் பெறுவதற்காகச் சென்றுகொண்டிருந்த போது இவர் கைதானதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-5)


உ
ஸ்ரீராமா ஜெயம்

**விவாக சுபமுகூர்த்தப் பத்திரிகை**

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் வெகுதானிய வருஷம் வைகாசி மாதம் 21ஆம் நாள் (04 - 06 - 1998) வியாழக்கிழமை பகல் 10-10 முதல் 12-06 வரையுள்ள அத்த நக்ஷத்திரமும் தசமித்திதியும் சித்தயோகமும் கர்கடக லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

நல்லூர் ப்ரம்மஸ்ரீ
பாலசுப்பிரமணிய குருக்கள்
(லேட்) சுவாமிரத்தின
சர்மாவின்
கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**பானுமதியை**



பம்பலப்பிட்டி
ப்ரம்மஸ்ரீ
சோமாஸ்கந்த சர்மாவின்
ஜேஷ்ட குமாரன்
சிரஞ்சீவி
**நரேந்திரசர்மாவிற்கு**

கன்னிகாதான பாணிக்கிரகணம் செய்து கொடுப்பதாய் இறைவனின் திருவருளை முன்னிட்டு மேற்படி சுபமுகூர்த்தம்
கொழும்பு - 13, விவேகானந்த மேடு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வந்திருந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

ஸ்ரீ ஸ்ரீபதி சோமாஸ்கந்த சர்மா
குடும்பத்தினர்
49/2, லோரன்ஸ் வீதி,
கொழும்பு - 04.

ஸ்ரீமதி சுவாமிரத்தின சர்மா
குடும்பத்தினர்
[illegible]
[illegible] (56...)


**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 14 — 05 — 1934 |  | 04 — 05 — 1998 |

திருமதி
**விஜயராணி கந்தசாமி**
(பத்மா)

பால் நினைந்தூட்டும் தாயைப் போன்று எங்களை
அன்பாக அறுசுவை உண்டி தந்து பேணியும்
அடியாளைப் போன்று எனக்குப் பணிவிடைகள்
செய்தும்
செந்தாமரைச் செல்வி இலக்குமி போன்று எனக்கு
யோகத்தைத் தந்தும் அகழ்வாரைத் தாங்கும்
பூமியைப்
போன்று எதையும் தாங்கும் இதயம் கொண்டு
என்னோடு அன்பாக வாழ்ந்தும் மதிநுட்பம் வாய்ந்த
மந்திரி போன்று எனக்கு ஆலோசனைகளை அவ்வப்
போது வழங்கியும் என்னை ஆளாக்கிய
என் கண்மணியே!
நீர் பூவோடும், பொட்டோடும் சென்றீர் அந்தோ
எங்களைஇனி ஆதரிப்பவர் யாரம்மா?

இறைவனடி சேர்ந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ்வேளையில் 1998—16—03 ஆம் நாளான இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்துக் கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கும்:

அன்னாரின் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரபிள்ளைகள்.

125, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி/ 3909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கொழும்பில இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இனங்களை உடைய கலர் மீன்கள் கண்ணாடியிலான மீன் தொட்டிகள் விற்பனைக்கு உண்டு. 12 மணியிலிருந்து தொடர்பு கொள்ளவும். A. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை. (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன் ஒழுங்கை). [56433]

## உடன் விற்பனைக்கு

பிறிமா பிறவுண் வெள்ளை ஒரு நாள் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. பதிவுசெய்வோரும், தேவைப்படுவோரும் பெற்றுக்கொள்ளவும். 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [56485]

## தவறிவிட்டது

ந. தவமலர் வட்டு. கிழக்கு சித்தன்கேணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (675102260V) சித்தன்கேணிக்கும் வட்டு. இந்துக்கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். [56484]

சின்னதம்பி பாக்கியம் பனை வீமன்காமம், தெல்லிப்பழை என்பவரது தேசிய (445103330V), விசேட அடையாள அட்டைகள் மல்லாகத்துக்கும், உரும்பிராய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சி. பாக்கியம், உரும்பிராய் இந்துக் கல்லூரி அருகில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். [56506]

## யாழ்ப்பாணம

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் உங்களது வரலாறு, ரைலாற்றை மறக்கலாமா? 300 நாடகங்களும், 50 சிறுகதைகளும், எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை வீரகேசரியில் எழுதிய கட்டுரைகள் ரூபா 50. [56247]

## இடமாற்றம்

யாழ். செயலகத்தில் இயங்கி வந்த விசேட அடையாள அட்டைப் பிரிவின் சகல பிரிவுகளும் கணடி வீதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு முன்னாலுள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. (ஜ-5-100)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் **1948 — 12 — 01**

இறைவன் அடியில் **1997 — 06 — 03**

அமரர் குணரத்தினம் சுந்தரலிங்கம்

திதி: திரயோதசி

பாரினிசை பிறந்து பரோபகாரியாய் விளங்கி
ஊ திமிசை ஏறி உழைக்கச் சென்றீர்
கூடாரின் குண்டினால் எங்கள் குலம்
கலங்க பிரிந்த தலைவனின்
ஓராண்டின் பூர்த்தியில் ஆத்மா சாந்தியடைய
வைரவக் கடவுளை வேண்டுதல் செய்கிறோம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நீங்காத நினைவில்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

(56492)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பரமு இராமலிங்கம்

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

தோற்றம் **04 — 01 — 1917**

மறைவு **03 — 06 — 1997**

அன்பின் திருவுருவே!
அன்பாய் இருந்து ஆதரவு காட்டினீர்கள்
ஆலோசனை வழங்கி ஆறுதல் சொன்னீர்கள்
அழைத்தபோதெல்லாம் அருகினில் இருந்தீர்கள்
ஆர்வமுடன் எமக்கு அறிவு புகட்டினீர்கள்
ஆத்ம சாந்திக்காய் ஆண்டவனை
வேண்டுகின்றோம்

பிரிவால் துயருறும்:
மனைவி பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வல்லிபுரம்,
புலோலி.

(56434)

---

# THE JAFFNA SCIENCE ASSOCIATION
## ANNUAL SESSIONS - 1998

Presidential Address
titled
" SCIENCE & SOCIETY "
to be delivered by:

Professor V. K. GANESALINGAM
On 5th June 1998 at 2.30 p. m.
( Sri Lankan time )

in the KAILASAPATHY AUDITORIUM
UNIVERSITY OF JAFFNA

ALL ARE WELCOME.

General Secretary.

1998-06-03 (56498)

---

மானிப்பாய்

கோவிற்பற்று பல நோக்கு கூ. சங்கம்

# விண்ணப்பம் கோரல்

சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட இருக்கும் தேநீர்ச் சாலைக்கு சமையற்காரர், தேநீர் தயாரிப்பாளர் ஆகிய பதவிகளுக்குத் தனித்தனியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முன் அனுபவம் உள்ளவர்கள் சங்கத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரத்தினைப் பெற்று தகமைச் சான்றிதழுடன் விண்ணப்பிக்கவும்.

முடிவு திகதி: 11-06-1998

சம்பளம் நேரில் பேசித்தீர்க்கப்படும்

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர்,
மானிப்பாய் கோ. ப. நோ. கூ. சங்கம்.
மானிப்பாய்.

தலைவர் பொது முகாமையாளர்

01-60-1998. (சி/3907)

---

# நீங்காத நினைவில் ஓராண்டு நினைவலைகள்



## அப்பையா ஜெயராசா

தோற்றம் **08 — 08 — 1958**

மறைவு **14 — 06 — 1997**

திதி: 03-06-98

நாளுந் தவறாது நாராயணன் தாள்போற்றி
நாராயணனை அழைப்பது வழமை.
வழமைபோல் அன்றும்
நாராயணனை அழைத்துத் திரும்ப
நாராயணா உன் வாசலில் என்ன?
காலனின் பாசறையா
ஜெமனாக வந்த அந்தக் குண்டு
மார்பினிலே பாய சொரிந்தது குருதி
புலம்புகின்றான் ஜெயராசன்
இராகவா இராகவா மகனே இராகவா!
மைந்தனின் மடிதனிலே
மண்டியிட்டான் ஜெயராசன்!

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

7/1, அன்னசத்திர ஒழுங்கை
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தாய், சகோதரர்,
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

தகவல்: ஜெயசந்திரன் (பெரியதம்பி)

(56503)

---

உ

சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சர்வ மங்களகரமான வெகுதானிய வருஷம் வைகாசித் திங்கள் 21 ஆம் நாள் (04—06—1998) வியாழக்கிழமை காலை 6.42 மணி தொடக்கம் 8.41 மணிவரையுள்ள தசமித்திதியும் அத்த நட்சத்திரமும், மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**கௌரிதாசன்**
(ராசா)
அவர்களுக்கும்

எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
**சிவானி**
(சிவா)
அவர்களுக்கும்

இறையருள் துணைகொண்டு மணமகளில்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை விரும்பும்:

திருமதி ப. கோபாலபிள்ளை
திரு. செல்வநாயகம் (மைத்துனர்)
திருமதி கேதாரகௌரி (சகோதரி)
கைதடி வடக்கு, கைதடி.

திரு. திருமதி நா. சிங்காரசா
" சிவா வாசா "
கைதடி வடக்கு,
கைதடி.

(இரு வீட்டார் அழைப்பு) (56461)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## கண்காணிப்புத் தேவை

ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் பாக்ரேவாவி நித்தியாயே, மனித உரிமை ஆணைக்குழுவுக்குத் தாம் சமர்ப்பித்த அறிக்கையில்—

இலங்கையில் மனித உரிமைகள் பேணப்படுவதில் உள்ள குறைபாடுகள், மனித உரிமை மீறல்கள் குறித்து மட்டுமன்றி, ஆள்கள் காணாமற் போவது தொடர்பாகவும் பிரஸ்தாபித்துள்ளார்.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது, இலங்கையில் ஆள்கள் காணாமற்போவது அதிகரித்து வருவதாகவும் அதனைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் சாடியுள்ளார்.

இது விடயத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். காணாமற் போகும் சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர்வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் ஆள்கள் காணாமற் போதல் என்பது ஒரு சர்வ சாதாரண விஷயமாகி விட்டது. அதுவும் தமிழ்ப் பகுதிகளில் எந்த வேளையிலும், எவர் ஒருவரும், எப்போதும் காணாமற் போகும் சாத்தியம் உண்டு. குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள், நங்கையர் என்றால் நிலைமை மிக மோசம்.

தமிழ்ப் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள ஆளணியினருக்கு உயிராபத்து நிகழ்ந்துவிட்டால், தமிழ் இளைஞர், நங்கையர் மிகத் தாராளமாகக் காணாமற்போவர் என்று எவ்வித தயக்கமும் இன்றி எதிர்பார்க்கலாம்.

ஒரு சில சந்தர்ப்பங்களில், ஆயுதக் குழுக்களிடையே நிலவக் கூடிய சர்ச்சைகள், சண்டைகள், மோதல்களின் போதும் தமிழ் இளைஞர், நங்கையர் காணாமற்போவதை மறைப்பதற்கில்லை.

எனினும் கைது செய்யப்பட்டும், கைது செய்யப் படாமலும் காணாமற் போவோர் எண்ணிக்கை அதிகம்.

இதில் வேடிக்கை என்னவெனில் காணாமற்போவோர் குறித்து எதுவுமே தெரியாது என்று அரச தரப்பு கையை விரித்து விடும். அதன் மூலம் ஒருவர் காணாமற் போனவர் ஆகுவதற்குக் காரணமாக இருந்தவர் எவ்வித நடவடிக்கைக்கும் ஆளாகாமல் பாதுகாக்கப்பட்டு விடுவார். இதுவேலியே பயிரை மேயும் கதை தான்!

1996 ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் கைது செய்யப்பட்டு அல்லது விசாரிக்கப்பட்டு காணாமற்போன சுமார் 600 பேரின் கதி என்ன, எங்கிருக்கிறார்கள் என்ற விவரங்களே கடந்த சுமார் இரண்டு வருடங்களாகத் தெரியவில்லை. பாதிக்கப்பட்ட பெற்றோர், உறவினர் ஜனாதிபதி வரை சென்றும் கைமேற் பலன் எதுவுமில்லை. வெறும் விசாரணைகள், வாக்குறுதிகளோடு காலம் கடந்து செல்கின்றது.

இத்தகைய நிலை நீக்கப்பட வேண்டும். அரசின் செயற்பாடுகள் தன்னையும், குற்றமிழைக்கும் தனது அதிகாரிகளையும் பாதுகாக்காமல் இருப்பதற்கு ஐ. நா. போன்ற நிறுவனத்தின் நிரந்தரக் கண்காணிப்பு அவசியம்.

# விஞ்ஞான அறிவு, ஆராய்ச்சிகளை குடாநாட்டில் மேம்படுத்த வேண்டும்

விஞ்ஞானத்தையும் விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் முன்னெடுத்தல், எமது பிரதேசத்திற்கு வேண்டிய கண்டுபிடிப்புக்களை பிரபல்யப் படுத்தல், விஞ்ஞானக்கல்வி, தொழில்நுட்பம் ஆகியவற்றை மேம்படுத்தல் ஆகியவை யாழ். விஞ்ஞான சங்கத்தின் முக்கிய நோக்கங்களாகும். இக் குறிக்கோளுடன் 1991 ஆம் ஆண்டு வித்திடப்பட்ட இச் சங்கம், 1992 — 1993 முதன் முறையாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வேரூன்றி கடந்த 6 வருடங்களாக பெரு விருட்சமாக கிளைவிட்டுள்ளது. பல்கலைக்கழகத்தினருக்காக மட்டுமன்றி பல்கலைக்கழகத்தில் இல்லாத விஞ்ஞானிகளுக்கும் இச்சங்கம் பயன்பட்டு வருகின்றது.

தூய விஞ்ஞானம், பிரயோகவிஞ்ஞானம், மருத்துவ விஞ்ஞானம், சமூகவிஞ்ஞானம் என்னும் பிரிவுகளைக் கொண்டு விஞ்ஞான ஆய்வுகளை மேம்படுத்தி, அவை பிரசுரமாவதற்கு ஆணிவேராக இச்சங்கம் அமைகிறது. கடந்த காலத்திலும் இவ்வருடத்திலும் 163 ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை பெருமைப்படக்கூடியதொன்று. மேலும் காலத்திற்கேற்றவாறு அவசியமான விடயங்கள் பற்றிய கருத்தரங்குகளை நடத்தி அக்கருத்துக்கள் புத்தக உருவில் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

விஞ்ஞானம் சம்பந்தமான விடயங்கள் தனி சொற்பொழிவாகவும், அந்தந்த விடயங்களில் பாண்டித்தியம் உள்ளவர்கள் மூலமாகவும் விஞ்ஞான அறிவைப் பரப்பவும், விஞ்ஞான வளர்ச்சியை முன்னெடுக்கவும் விஞ்ஞானச் சங்கம் முன்னின்று உழைக்கின்றது, சங்கத் தலைவர்களின் தலைமையுரைகள் ஒவ்வொன்றும் பொக்கிஷமாக விளங்குகிறது. இவ்வுரைகள் இன்றைய விஞ்ஞானிகளுக்கும், எதிர்கால விஞ்ஞானிகளுக்கும் மிக உபயோகமானவை. இதே போன்று பகுதித் தலைவர்களின் உரைகள், சிறப்புரைகள் அத்துறையில் சிறந்து விளங்கும் பெரியார்களின் ஆக்கங்களும் மிக உபயோகமானவையாகும். இவை யாவும் சேர்ந்து ஒரு தனிப் பிரசுரமாக பிரசுரித்து உறுப்பினர்களுக்கு இலவசமாக ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் வழங்கப்படுகின்றன.

## அதற்காக உழைக்கிறது யாழ்.விஞ்ஞான சங்கம்

### மாணவருக்கு அறிவூட்டுதல்

இவற்றுக்கு மேலாக மாணவர்களிடையே விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்தும் நோக்கமாக, சங்கம்விஞ்ஞானக் கருத்தரங்குகளை (அழைக்கப்பட்ட) கல்லூரிகளில்நடத்தப்படுவதுடன்விஞ்ஞான கண்டுபிடிப்புகள் பற்றிய தரவுகளை மாணவர்களுக்கு அளித்து வருகின்றது. ஒவ்வொரு வருடமும் மாணவர்களுக்காக விஞ்ஞான தினம் சிறப்பாக நடந்தேறி வருகிறது. இதில் விஞ்ஞானப் பேச்சுப் போட்டி, விஞ்ஞான வினா விடைப் போட்டி ஆகியன யாழ். மாவட்டத்தில் உள்ள கல்லூரிகள் அனைத்திற்கும் அறிவிக்கப்பட்டு நடத்தப் படுகின்றன. இத்தினத்தில் கல்லூரி மாணவர்களுக்காக பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் அடங்கிய ஒரு குழு மூலம் இப் போட்டிகள் நடத்தப்பட்டு இதன் மூலமாக நவீன விஞ்ஞான அறிவு இம் மாணவர்கள் மத்தியில் பரப்பப் படுகின்றது. வெற்றி பெறும் மாணவர்களுக்கு பணமாகவும், பரிசாகவும், சான்றிதழாகவும் வழங்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் நடைபெறும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அம் மாணவர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படுகின்றனர்.

### ஆராய்ச்சிகள் அதிகரிப்பு

கொழும்பில் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம பல காலமாக இருந்து வருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்படும் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சிக் கட்டுகைரளை இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்திற்கு அனுப்பி வைத்தார்கள். அக கட்டுரைகளை யாழ்ப்பாணத்து விஞ்ஞானிகள், கொழும்பு சென்று அதை சமர்ப்பித்து கருத்துரை வழங்குவர், இது பல காலமாக ஒழுங்காக நடந்து வந்தது. ஆனால் யாழ்ப்பாணத்து விஞ்ஞானிகள் கொழும்புக்குச் சுலபமாக போக முடியாத காரணத்தால் யாழ்ப்பாணத்தில் செய்து முடிக்கப்பட்ட சில ஆராய்ச்சிகள் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கததில் சமர்ப்பிக்கப்படாத நிலை இருந்தது. இதனால் இங்கு விஞ்ஞான சங்கம் ஒன்றினை அமைப்பதாக முடிவு செய்த சில விஞ்ஞானிகள் யாழ். விஞ்ஞான சங்கத்தை இங்கு அமைத்தார்கள். இதனால ஆராய்ச்சிகள் பலவாறாகப் பெருகியதுடன் ஆராய்ச்சிக் கட்டுரைகள் யாழ். விஞ்ஞானச் சங்கத்திலே சமர்ப்பித்து அச் சங்கமே பிரசுரிக்கும் நிலை உருவாகியது. எனவே யாழ். விஞ்ஞான சங்கம் இப்பொழுது தனித்துவமாக இயங்குகின்றது.

இச் சங்கத்திற்கு சில வளங்களைஅரசாங்கத்திடமிருந்து பெற முடியுமா என்ற கருத்து இப்போது நிலவி வருகின்றது. இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் அரசாங்கத்திடமிருந்து சில வளங்களைப் பெற்று வருகிறது. ஆனால் விஞ்ஞானச் சங்கம் உறுப்பினர்கள் வருவாயைக் கொண்டே நடைபெற்று வருகிறது.

அகில உலகத்திலும் இன்று ஏற்படுகின்ற விஞ்ஞான ஆக்கங்கள் இலங்கைககு வருவது மிகத் தாமதமாகிறது. இந்த ஆக்கங்கள் சஞ்சிகை மூலமாக வந்தடைகின்றது. கொழும்புக்கு வரும் சஞ்சிகைகள் யாழ்ப்பாணம் வர மிகவும் தாமதம் அடைகிறது. சில வேளைகளில் வந்து சேருவதில்லை. கல்லூரிகளுக்கு இச் சஞ்சிகை போய்ச் சேருவது குதிரைக் கொம்பாக இருக்கிறது. எனவே விஞ்ஞானச் சங்கம் மூலமாக மாணவர்களுக்கும் மற்றையோருக்கும் விஞ்ஞான அறிவினை தெரிய வைப்பதில் யாழ். விஞ்ஞானச் சங்கம் ஈடுபட்டுள்ளது. நவீன விஞ்ஞான விடயம் தொடர்பாக சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் நடத்துவதால் பலர் நன்மையடைய ஏதுவாகின்றது. அத்துடன் பல விஞ்ஞானிகள் இப்பிரதேசத்தில் தோன்ற வாய்ப்பும் ஏற்படும்.

விஞ்ஞான ஆராய்ச்சிகள் நடைமுறைப்படுத்தும்போது அவ்வாராய்ச்சியின் பலாபலன்களை ஆராய்ச்சிக்கட்டுரைகள் மூலம் வெளியிடுவது பல்வேறு நாடுகளில் இருந்து வரும் முறையாகும். இதன் மூலமாக பல விஞ்ஞானிகள் தோன்றியிருக்கிறார்கள். வளர்ந்து வரும் நாடுகளில் இந்நடைமுறைநடைபெற்று வருகிறது. இப்படியான ஆராய்ச்சிகள் செய்பவர்கள் சிறந்த ஆராய்ச்சியாளராகவோ அல்லது சிறந்த பெயர்பெற்ற கல்வியாளராகவோ வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

வெளிநாடுகளில் செய்யப்படுகின்ற ஆராய்ச்சி வெளிநாட்டு விடயமாகவே நடைபெறுகிறது. உள்நாட்டுக்குத் தேவையான விவசாயம், மீன்பிடி, கால்நடைவளர்ப்பு, தொழிற்சாலை ஆகியவற்றுக்கான விஞ்ஞானகண்டுபிடிப்புகள் இங்கேயே செய்யப்படுவது பொருத்தமானதாகும். இதனை மையமாக வைத்து யாழ். விஞ்ஞான சங்கம் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகளை வெளிக் கொணர்வதற்கு யாழ். விஞ்ஞானச் சங்கம்ஒரு மையமாக அமைகின்றது.

இது போன்ற பல சேவைகளை முன்னெடுத்து முன்னேறிச் செல்வதற்கு இச் சங்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தருபவர்கள் சங்க அங்கத்தவர்களே. அங்கத்தவர்கள் அதிகம் சேரும் போது ஆக்கங்கள் அதிகமாகின்றன. எனவே யாழ் மாவட்டத்திலுள்ள விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம், பொறியியல்துறைகளைச் சேர்ந்தவர்கள், தொழிநுட்பவியலாளர்கள் இச் சங்கத்துடன் ஒன்றிணைந்து சேவை செய்ய முன்வருவது வரவேற்கத்தக்கது. யாழ். விஞ்ஞானச் சங்கம் பல்கலைக்கழக உறுப்பினருக்கு மாத்திரம்சேவை செய்யாது. யாழ். மாவட்டக் கல்வியாளருக்குச் சொந்தமாக இருக்க வேண்டும் என்பதே இச் சங்கத்தின் குறிக்கோளாகும்.

★

பேராசிரியர்

வி. கே. கணேசலிங்கம்

(யாழ். விஞ்ஞான சங்கத்தின் ஆறாவது வருடாந்த விழா இன்று தொடக்கம் வெள்ளிக் கிழமை வரை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறுகிறது.)

# பத்திரிகையாளர் மறைவுக்கு இலக்கிய வட்டம் அனுதாபம்

ஈழத்தில் மட்டுமல்லாது தமிழ் நாட்டிலும் பத்திரிகைத் துறையிலும் எழுத்துத் துறையிலும் சமமாக பிரபல்யம் பெற்று விளங்கியவர் இராஜ. அரியரத்தினம். அவரது மறைவு ஈடு செய்ய முடியாததாகும். ஈழத்து எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்களுக்குப் பேரிழப்பாகும்.

இவ்வாறு மறைந்த பத்திரிகையாளர் இராஜ. அரியரத்தினத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில் யாழ். இலக்கிய வட்டம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது—

இலங்கையிலும் இந்தியாவிலும் புகழீட்டிய ''ஈழகேசரி'' என்ற தேசிய வார வெளியீட்டில் ஆசிரியராக அப்பத்திரிகையின் பாலர் கழகத்தின் கேசரி மாமாவாக விளங்கியவரும், ''ஈழ நாடு'' ''சிந்தாமணி'' பத்திரிகை ஆசிரியராக இருந்தவருமாகிய இராஜ. அரியரத்தினம் இ அமரரானார் என்ற செய்தி ஈழத்தமிழ் எழுத்தாளர்களுக்குப் பெருங்கவலையை அளித்துள்ளது.

சாவகச்சேரியில் 11-05-1916 இல் பிறந்த இராஜ. அரியரத்தினம் அவர்கள் சிறுவயதிலேயே பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்தார். ''அஜன்'' ''சோணாசலம்'' ''ஈழத்துச் சோணாசலக் கவிராயர்'' என்ற புனை பெயர்களில் எழுதியிருக்கிறார்.

வீரகேசரியில் தொடர்ந்து வெளியான வாழ்க்கை வரலாறு ''துருக்கியின் தந்தை'' பலராலும் பாராட்டப்பட்ட ஒன்றாகும். ''தங்கப்பூச்சி'' ஈழகேசரியில் வெளியான அவரது நாவலாகும்.

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் கலைக் களஞ்சியம் தொகுதிகளில் சோமசுந்தரப் புலவர், திருகோணமலை போன்ற சிறு கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார்.

1941 ஆம் ஆண்டு ''ஈழகேசரி'' யில் சேர்ந்த இராஜ. அரியரத்தினம் அரசியல், இலக்கியம், சிறுகதை, கவிதை, நகைச்சுவைக் கட்டுரை, மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் பலவற்றை எழுதினார். சிந்தாமணியில் இரத்தினக் கம்பளம், ஆ.ப வட்டம் என்ற தலைப்புக்களில் தொடர்ந்து சுவையான குறிப்புக்களைத் தந்துள்ளார்.

தமிழ் நாட்டுப் பத்திரிகை உலகில் பிரபலமான ஒரே ஒரு யாழ்ப்பாண எழுத்தாளரும். பத்திரிகையாளரும் என்ற பெருமைக்குரியவர் இராஜ. அரியரத்தினம் அவர்கள். சில பத்திரிகைகளின் கௌரவ ஆசிரியராக விளங்கினார். தமிழ்நாட்டில் நடந்த எழுத்தாளர் மாநாடுகளில் எல்லாம் பங்குபற்றி

( 8 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

வைகாசி - 21

வியாழக்கிழமை

திதி: தசமி

பின்னிரவு 02.47 வரை.

நட்சத்திரம்: உத்தரம்

காலை 6.28 வரை

பாபஹ்ரதசமி

சுபநேரம் 07.22 -08.52

ராகுகாலம்: 01.22-02.52

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கண்ணியமான மனிதன் எப்பொழுதும் [illegible] சிந்தனை செய்கிறான்.

- ரூசோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரினால் அல்லற்படும் மக்களுக்கு செஞ்சிலுவை இயன்றளவு உதவும்

## யாழ். பிரதிநிதி கூறுகிறார்

நல்லூர், ஜூன் 3

இலங்கையில் இன்று நடைபெறும் போரினால் அல்லற்படும மக்களுக்கு உதவு முகமாக விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் முக்கிய ஒப்பந்தங்களைச் செய்து செயற்படுத்தி வருகிறோம். செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மக்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறது— என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் யாழ். பிரதிநிதி செல்வி ஆன் கூறினார்.

செஞ்சிலுவைச் சங்க உலக தினத்தை முன்னிட்டு யாழ். கிளையில் விசேட நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் பிரிவுத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தலைமையில் நீரிழிவு நோய் குறித்த விசேட சிகிச்சை முகாம் பொதுக்கூட்டம் என்பன இடம்பெற்றன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ். பிரதிநிதி ஆன் அந்த வைபவத்தில் கலந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:

சுமார் பதின்மூன்று கோடி உறுப்பினர்கள் இப்போது செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவில் பிரதிநிதிகளாக உள்ளனர். யுத்தம் நடைபெறும் பகுதிகளில் வாழும் மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்வைத் தரவும், போரில் கலந்து கொண்டிருப்பவர்கள் காயங்கள் மற்றும் துன்பங்களை அனுபவிக்கும் போது அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவுவதுமே சங்கத்தின் குறிக்கோளாகும். இதன் ஆரம்பம் ஒரு வரலாற்று முக்கியம் மிக்க சம்பவம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மூன்று பிரிவுகளாக உள்ளது- ஒவ்வொரு பிரிவும் தமது செயற்றிட்டத்திற்கமைய மக்களுக்கு தமது சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன'—என்று தெரிவித்தார்.

பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் தமது தலைமை உரையில் —

ஒரு புனிதமான சேவையை இந்த மண்ணுக்கு வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவு தனது பணிகளைத் தொடர்கிறது. இடப்பெயர்வு எமது மக்களை எவ்வாறான துயரத்துள் மூழ்கடித்தது என்பது நாம் சொல்ல வேண்டியதில்லை. இருந்த போதும் இடப்பெயர்வு காரணமாக துன்பப்பட்ட மக்களுக்கு உடனடியாக முடிந்த சேவைகளைச் செய்து ஆறுதல் வழங்கிய ஒரேயொரு ஸ்தாபனம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். பிரிவே. தமிழர்களது பண்பாடும், கலாசாரமும் மதிக்கப்பட வேண்டும் என்பதில் யாழ். கிளை உறுதியாக நிற்கிறது — என்றார்.

சி. சிவமகாராசா பேசும் போது —

பல வேறு வழிகளிலும் துன்பப்பட்டிருக்கும் எமது மக்களுக்காக எதிர்காலத்தில் நாங்கள் என்ன செய்யவுள்ளோம் என்பது குறித்து திட்டவட்டமான நிலைப்பாடு இப்போது நமக்குத் தேவை. செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கங்கள் போரினால் அழிவுற்றிருக்கும் நாடுகளுக்கு மக்களுக்கு புதிய வாழ்வை அமைத்துக் கொடுப்பதே. அந்த வகையில் ஒரு போரின் கெடுபிடிக்குள் கிடக்கும் இந்தப் பகுதி மக்களுக்குச் சங்கம் ஆற்றவேண்டிய பணிகள் பல அதை நிறைவுசெய்ய நாம் முடிந்த அளவுக்குப் பாடுபடவேண்டும் — என்றார்,

மற்றும் உபதலைவர் எஸ். பாலகிருஷ்ணர். எஸ். தனபாலன் ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினார்கள். சங்கம் நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(அ-103)

## ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து வகைகள்

யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் இவ்வருட இரண்டாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு நேரடியாகக்கொண்டு சென்று விநியோகம் செய்து வருகின்றனர்.

அண்மையில் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் இந்த மருந்து வகைகள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டதை அடுத்து இந்த விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் தென்மராட்சிப் பிரிவிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளான சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை, கொடிகாமம் அரசினர் வைத்தியசாலை. வரணி அரசினர் வைத்தியசாலை, பளை அரசினர் வைத்தியசாலை, கைதடி அரசினர் வைத்தியசாலை, மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றிற்கு திணைக்கள லொறி மூலம் கொண்டு செல்லப்பட்டு மருந்துவகைகள் விநியோகம் செய்யப்பட்டன.

இதேவேளை— சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் கிளினிக்குகளுக்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

(ஐ-135)

## 4 பாடசாலைகளில் எழுத்தறிவூட்டற் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 3

கல்வி வலயம் ஒன்றின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான எழுத்தறிவூட்டற் பயிற்சி வலயம் ஒன்றைச் சேர்ந்த 4 பாடசாலைகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

நாவாந்துறை றோ. க.த. பாடசாலை, பூம்புகார் அ. த. க. பாடசாலை, சாவகச்சேரி றோ. க. த. பாடசாலை, கெற்பலி அ. த. க. பாடசாலை முதலிய பாடசாலைகளிலேயே எழுத்தறிவூட்டற் பயிற்சி வழங்கப்படுகிறது.

பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்வதாக கல்விவலயம் ஒன்றின் கல்வி அபிவிருத்தி திட்டமிடல் உதவியாளர் தெரிவித்தார்.

(ஐ-7)

## சிங்கள டாக்டரின் சைக்கிள் களவு

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சிங்கள டாக்டர் ஒருவரின் புதிய சைக்கிள் ஒன்று யாழ். நகரில் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இரு சிங்கள டாக்டர்களும் நவீன சந்தைப் பகுதியில் புதிய சைக்கிளை நிறுத்திவிட்டுப் புடைவைக் கடை ஒன்றினுள் சென்று திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிள் களவாடப் பட்டிருந்தது.

இது குறித்து அந்த இரு டாக்டர்களும் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

(இ-9-15-139)

## ஏ. ஆர். வி வந்தது

திருநெல்வேலி, ஜூன் 3

கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்களத்தின் மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து யாழ். சுகாதார திணைக்களத்திற்கு விசர் நாய்க்கடிக்கான 'ஏ. ஆர். வி, எனப்படும் ஊசி மருந்து, ஏற்புத்தடுப்பு ஊசிமருந்து' பாம்புக்கடிக்கான ஊசி மருந்து ஆகியன செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்துடன் குடும்பக்கட்டுப் பாட்டுக்குப் பயன்படுத்தப்படும் ஊசிமருந்துகளும் குளிகைளும் வந்துள்ளன.

(ஐ-135)

## தாக்குதலை அடுத்து படையினர் தேடுதல்

### பலர் விசாரிக்கப்பட்டனர்

மட்டுவில் வடக்கு மகாவித்தியாலயத்திற்கு முன்பாக ஞாயிறன்று நண்பகல் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து அன்றைய தினம் மட்டுவில் தெற்குப் பகுதி உட்பட மட்டுவில் கனகன்புளியடி வீதியில் உள்ள வீடுகள் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

பொதுமக்கள் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள முகாமிற்குக் கூட்டிச் செல்லப்பட்டு சோதனை செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம்சாவகச்சேரி நகரில் படையினரின் சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

(இ-31)

## உருளைக்கிழங்கு பெற விண்ணப்பிக்கலாம்

திருநெல்வேலி, ஜூன் 3

எதிர்வரும் பெரும போக உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி விவசாய சம்மேளனம் மூலமாக இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கமநலகேந்திர நிலையத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்கவேண்டும் என்று யாழ். கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

காலபோக உருளைக் கிழங்குச்செய்கைக்கென 100 மெற்றிக்தொன் ''டிசரி'' இன விதை உருளைக்கிழங்கும், 50 மெற்றிக்தொன் ''லைறா'' இனவிதை உருளைக்கிழங்கும் யாழ். மாவட்டத்திற்கு கொண்டுவரப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## பத்திரிகையாளர்...

(ஏழாம் பக்கத் தொடர்)

ஈழத்திற்குச் சிறப்புத் தேடித் தந்தவர். அகில இந்திய எழுத்தாளர் பத்திரிகையாளர் (P. E. N) சங்கத்தில் அங்கத்தவராக இருந்து பெரும் பணியாற்றியவர். தென்னிந்தியப் பத்திரிகையாளர் சங்கம், சென்னை கம்பர் கழகம் என்பவற்றிலும் அங்கத்துவம் வகித்தவர்.

சென்னை பாரதிப்பதிப்பக வெளியீடாக அவர் எழுதிய ''கல்கி பிறந்தார்'' என்ற நூல் வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் 1951 ஆம் ஆண்டு நடந்த நான்காவது தமிழ் மாநாட்டின் போது தமிழ்விழா நிர்வாக சபைப் பிரசாரப் பகுதியில் முக்கிய அங்கத்தவராக இருந்து ''யாழ்ப்பாணம்'' என்ற நூலை வெளியிடக் காரணரானார். தென்னிந்திய சஞ்சிகைகள் பலவற்றில் அவர் ஆக்கங்கள் வெளிவந்தன.

ஈழத்தில் பல எழுத்தாளர்களை வளர்த்தஇராஜ அரியரத்தினம், ஈழத்தமிழர் பத்திரிகை உலகின் ஜாம்பவனாவார்.

அவரது மறைவு யாழ். இலக்கிய வட்டத்திற்குப் பேரிழப்பாகும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

## கண்பரிசோதனை நடத்தக் கோரிக்கை

நெல்லியடி, ஜூன் 3

கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் கண் பார்வையற்றவர்கள் யாழ்ப்பாணம் சென்று கண்சிகிச்சை செய்வதில் பலகஷ்டங்களை எதிர்நோக்குவதனால் நெல்லியடிப் பகுதியில் இலவச கண்பரிசோதனை முகாமை ஏற்படுத்தித் தருமாறு, வடமராட்சி தெற்கு மேற்குபிரதேச சபைத் தலைவர் செல்லையா சுந்தரமூர்த்தி இலங்கைச்செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளையினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஐ-5-109)

## 'விருட்சம்' வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினரின் ''விருட்சம்'' சஞ்சிகை வெளியீடு இன்று புதன் கிழமை மாலை 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

(ஐ-8)

## திருட்டு

நெல்லியடி, ஜூன் 3

வீட்டிலிருந்தோர்வெளியே சென்ற நேரம் பார்த்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந் வெண்கல, அலுமினியப்பாத்திரங்களை திருடிக் கொண்டு தலைமறைவானார்கள்.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் புலோலி கிழக்கிலுள்ள ஒரு வீட்டில் இடம் பெற்றது.

(ஐ-5-109)


## வாழ்த்துகின்றோம்

யா/ இடைமயாணன் அ. த. க. வித்தியாலயம்

க. பொ. த. (சா/த) பரீட்சை முடிவுகள் - 1997 மார்கழி

| | |
|---|---|
| 6 D, C | சி. அஞ்சலா |
| 5 D, 2 C | சி. சிந்துஜா |
| 4 D, 3 C | சோ. கவிமோகனா |
| 3 D, 4 C | அ. வசீகரன், பா. முகுந்தன் |
| 3 D, 3 C, S | தி. சரிதா |

க. பொ. த. (உ/த) கற்கத் தகுதி பெற்றோர் 20 பேர்.

மேற்படி மாணவர்களையும் அவர்களின் உயர்விற்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(56514)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இடைக்காடு மகாவித்தியாலயம்.

1997 ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து க. பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ள 17 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திறமைச் சித்திகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 6 D, | 2 C, | | — | 01 |
| 5 D, | 3 C, | | — | 01 |
| 5 D, | 2 C, | S | — | 01 |
| 3 D, | 4 C, | | — | 01 |
| 2 D, | 4 C, | S | — | 02 |
| D, | 5 C, | S | — | 01 |
| D, | 4 C, | 2 S | — | 01 |

பழையமாணவர்சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சபை,
பெற்றோர், ஆசிரியர்.

குறிப்பு: 2000 ஆண்டுக்கான உயர்தர விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

(56515)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்மாதம் நடைபெறும் பரீட்சைகளின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இந்த மாதத்தில் நாடு முழுவதிலும் நடத்தப்படவிருக்கும் பரீட்சைகள் தொடர்பான விவரங்களை அறிவித்துள்ளது. அவை வருமாறு:

★ இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு II தரம் II இற்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடைபெறும். (கடந்தமூன்று ஆண்டுகளுக்குரியது)

★ பட்டப்பின்படிப்பின் டிப்ளோமா தேர்வு (உள்வாரி) பயிற்சி நெறிக்கு அபேட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறும்.

★ மாகாண அரச சேவையில் சுருக்கெழுத்தாளர் சேவைக்கு ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

★ திறமை அடிப்படையில் பதவிஉயர்த்தலின் மூலம் தட்டெழுத்தாளர்/ சுருக்கெழுத்தாளர் சேவைகளின் அதிசிறப்புத் தரத்திற்கு நியமிப்பதற்கான பரீட்சை (1995) எதிர்வரும் 20 ஆம் திகதி.

மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக கல்வி வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-7)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, ஜூன் 3

சரசாலை நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம்கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர் வரும் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

சிவ ஸ்ரீ சு. நடராஜக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்று வருகின்றன.

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 3

வண்ணார் பண்ணை கில்னர் ஒழுங்கை அருள்மிகு ஸ்ரீ மகாமாரியம்மன் கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித்தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் பி. ப. 2. 30 மணிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாலை 3.30 மணிக்கு விசேஷ பூஜையும் அதனைத் தொடர்ந்து வசந்தமண்டப பூஜையும் இடம்பெற்று மாலை 5.30 மணியளவில் சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும். (ஐ-ரீ)

★ ★ ★

உரும்பிராய், ஜூன் 3

உரும்பிராய் ஸ்ரீ பர்வத பத்தினியம்மன் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் கைலாயவாகனத் திருவிழா நடைபெறும்.

இவ்விழா உரும்பிராய் வடக்கு மக்களின் உபயமாக இடம்பெறுகிறது. (ஐ-154)

★ ★ ★

அரியாலை, ஜூன் 3

கொழும்புத்துறை மேற்கு விநாயகர்ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு மஞ்சத்திருவிழா நடைபெறும். (ஐ-17)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 3

காரைநகர் திக்கரை முருகன் ஆலய வைகாசி விசாகத் திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதியும் கும்பாபிஷேகம் எதிர்வரும் 11 ஆம் திகதியும் நடைபெற்று எதிர்வரும் 14 ஆம் திகதி வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறவுள்ளது. (ஐ-ரீ)

★ ★ ★

வடமராட்சி, ஜூன் 3

தென்புலோலி உபயகதிர்காமம் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

முருகப்பெருமான் திரு அவதாரம் இம்மாதம் 8 ஆம் திகதியும், வள்ளி திருமணம் அடுத்த மாதம் 19 ஆம் திகதியும்நடைபெறுவதுடன் கந்தபுராணப் படிப்பு பூர்த்தியடையும் மறுநாள் அன்னதானம் இடம்பெறும். (இ-173)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 3

தெல்லிப்பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8-30 மணி முதல் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் கோட்டக்கல்வி அலுவலர் ஆ. கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

## தேடுதல்

வடமராட்சிப்பகுதியில் கரவெட்டி கிழக்கு, துன்னாலை, கரவெட்டி மேற்குப்பகுதிகள் நேற்று முன்தினம் காலை, இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது அந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் நெல்லியடி திருஇருதயக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்பு விடுவிக்கப்பட்டனர்.

## தொலைபேசி இணைப்பு வழங்கக் கோரிக்கை

திருநெல்வேலி, ஜூன் 3

நல்லூரிலுள்ள யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள பணிமனைக்கு இதுவரை தொலைபேசி இணைப்பு வழங்கப்படவில்லை. யாழ். மாவட்ட விவசாயிகளின் முக்கிய தேவைகளை நிறைவேற்றும் பொறுப்புடைய இப் பணிமனைக்கு கூடிய விரைவில் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவேண்டும் என்று திணைக்கள உதவி ஆணையாளர் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ-5-135)

## சேர்த்து வாசிக்கவும்

உதயன் 01 — 06 — 1998 இதழில் 2 ஆம் பக்கத்தில் திருமதி நாகேஸ்வரி சந்திரசேகரத்துக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்திப் பிரசுரமான விளம்பரத்தில் —

கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களின் விவரம் பரிபாலன சபை, ஞானவைரவர் தேவஸ்தானம், கலட்டிப்புலம், ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் என்பதாகும்.

விலாசத்தில் ஒரு பகுதி தவறுதலாக விடுபட்டுவிட்டது. சேர்த்து வாசிக்கவும்

## குருநகர்...

[முதலாம்பக்கத் தொடர்]

வேண்டுமென்று சோதனை முகாமில் கடமையிலிருந்த இராணுவ வீரர்கள் கூறிய போது அந்த யுவதிகள் பிஸ்டலால் சுட்டனர். அதன் பின்னர் 2 கிரனேட்டுகளை துருப்பினர் மீது வீசினர். தாக்குதல் நடத்தப்பட்ட திசையை நோக்கி இராணுவத்தினர் சுட்டனர். அந்த இரண்டு யுவதிகளும் ஓடித் தப்பிவிட்டனர்.

அதனைத் தொடர்ந்து சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட யுவதிகளை பிடிக்கும் நோக்கத்துடன் இராணுவத்தினர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இச் சம்பவத்தில் ஈடுபட்ட யுவதி ஒருவர் தனது வீட்டுக்குத் திரும்பி ஆயுதத்தை மறைத்து வைத்து விட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சேர்ந்து கொண்டார். விக்டர் என்ற பெயருடைய ஒருவர் அந்த யுவதியுடன் கூடச்சென்றதாக நம்பப்படுகின்றது.

தேவதாஸ் ஜெயதனா (சுபாஜினி) என்று பின்னர் அறியப்பட்ட அடுத்த சந்தேக நபர் ஒட்டோ ஒன்றில் ஏறி தேடுதல் நடவடிக்கையிலிருந்து தப்ப முயன்றார். அவர் விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்று அடையாளங்கண்டு கொண்ட சிவிலியன் ஒருவர், அவரது தப்புதல்குறித்து துருப்பினருக்கு தகவல் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் சுபாஜினியைக கைது செய்தனா. விசாரணை நடத்தப்பட்ட போது இந்த பெண் சந்தேக நபர் சிப்பாய் ஒருவரிடமிருந்து ஆயுதத்தைப் பறிக்க முயன்றார். சம்பந்தப்பட்ட சிப்பாய் அந்த யுவதியைச் சுட்டதும் அவர் இறந்துவிட்டார்.

மே மாதம் 31 ஆம் திகதி தொடர்ந்து நடத்தப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது படையினர் 3 முதல் 4 பொதுமக்களைத் தாக்கியதாகச் சொல்லப்படுகின்றது.

இச்சம்பவம் நடந்தவுடன 512 ஆவது பிரிகேட்டின் பொறுப்பதிகாரியான பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் அந்தப் பகுதிக் குடியிருப்பாளர்களை குருநகர் சென் மேரிஸ் தேவாலயத்தில் சந்தித்து இதுபோன்ற தாக்குதல் சம்பவங்கள் இனிமேல் நடைபெறமாட்டாது என்று உறுதியளித்தார்.

தவறிழைக்கும் துருப்பினர் மீது தாம் கடும் நடவடிக்கை எடுப்பார் என்றும், சம்பவம் குறித்து ஏற்கனவே விசாரணை ஆரம்பமாகிவிட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

விசாரணையின் பலனாக சிப்பாய் ஒருவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலீஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

மே 30 ஆம் திகதி நடைபெற்ற சம்பவத்தின்போது இடையில் அகப்பட்டுக் காயமுற்ற பின்வரும் பொதுமக்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதயமரியா அல்பிரட் (35, பூங்கா வீதி, குருநகர்), அருள்தாஸ் அடிலின்ஜீவாஸ் (இல 35, பூங்கா வீதி, குருநகர்), பசுபாலா அன்ரன் (23/4, பூங்கா வீதி, குருநகர்), சேனாதிராஜா ஆனந்தராஜா (இல 42/8, ராஜாநந்த வீதி, குருநகர்). ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஐந்தாவது நபரான —ஆஸ்பத்திரியில் முன்னர் சேர்த்து கொண்டதாககுறிப்பிடப்பட்ட பெண்—தனராஜா சுகந்தி என்று அடையாளங் காணப்பட்டார்.

இவர் ஊர்ஜிதம் செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் உறுப்பினர் ஆவார்.

சுற்றிவளைப்புத் தேடுதலின் போது அவரது வீட்டிலிருந்து துருப்பினர் பின்வரும் பொருள்களைக் கண்டுபிடித்தனர்.

1) நான்கு கைக்குண்டுகள்.
2) ஒரு மைக்ரோ பிஸ்ரல்
3) 19 ரவைகள்.
4) இரண்டு இராணுவச் சீருடைப் பைகள்.
5) 2 சிவிலுடைப்பைகள்.
6) இரண்டு பெண்கள் கைப் பைகள்.

மே 31 ஆம் திகதியான ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 10 பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆனால இவர்கள் படுகாயமடைந்திருக்கவில்லை என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இலங்கை இராணுவமிலிட்டரி பொலீஸாரும், சிறிலங்காப் பொலீஸாரும் தமது விசாரணைகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள். இராணுவத்தினரைப் பொறுத்தளவில் இது போன்ற விரும்பத்தகாக சம்பவங்கள் இனிமேல் நடைபெறமாட்டாது என்று பிரிகேட்கொமாண்டர் திடமான உறுதிமொழிவழங்கியுள்ளார்

யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைகளின் கொமாண்டர் மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்ல பலதரப்பட்ட மட்டங்களிலும் துருப்பினரினதும், கொமாண்டர்களினதும் நடத்தைகளை மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றார். கடந்த காலத்தைப் போல குற்றமிழைத் தவராகச் காணப்படுவோர் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றுள்ளது. (இ-8)


**நாளை புதுக்கடைத் திறப்பு விழா**

வெகுதானிய வருடம் வைகாசி மாதம் 21 ஆம் நாள் (4-6-98) வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரையுள்ள (பழைய நேரம்) சுபமுகூர்த்தத்தில்

**METRO WINE STORES**

**மெற்றோ வைன் ஸ்ரோர்ஸ்**

என்னும் ஸ்தாபனத்தை

இல. 117, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்

என்ற முகவரியில் ஆரம்பித்து வைக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் சொள்ளுகின்றோம். அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இச் சுபவேளையில் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

207, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (56533)

தா. நவனகுமார்



வட்டு. இந்துக் கல்லூரி
உயர்தர மாணவர் மன்றத்தின்

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

1 ஆம் பரிசு: 4125 2 ஆம் பரிசு: 1959
3ஆம் பரிசு: 2883

இம் மூன்று பரிசுகளும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

ஆறுதல் பரிசுகள்

1) 6892 2) 6888 3) 2608 4) 2695
5) 3644 6) 901 7) 340 8) 2910
9) 5163 10) 6141

மேற்குறித்த இலக்கத்தை உடைய அதிர்ஷ்டசாலிகள் தங்கள் பற்றுச்சீட்டுடன் 30-06-98ற்கு முன்னர் பாடசாலையில் பொருள்களை பெற்றுக்கொள்ளவும்.

(56529) உயர்தர மாணவர் மன்றம்



**ஜவுளி உலகின் முன்னோடிகள்!**

மங்கள வைபவங்களுக்கேற்ற பட்டுப்புடைவைகள் மற்றும் இதர ஜவுளி தினுசுகளுக்கு நாடவேண்டிய இடம்

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.** 13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி3867)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரெலிகொம்...

(முதலாம் பக்கத் தொடர்)

''கடந்த இரு மாத காலங்களில் ரெலிகொமின் 6 பரிவர்த்தனை நிலையங்களில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தாக்குதல்களினால் தொலைத் தொடர்புச் சேவைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது'' என்று அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அதே சமயம் ரெலிகொம் பரிவர்த்தனை நிலையங்களில் இடம்பெற்று வரும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து இரகசிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொள்ள விருக்கின்றனர்.

இக்குண்டு வெடிப்புச் சம்பவங்கள் உள் வீட்டு வேலையாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

ரெலிகொம் நிறுவனம் தனது 10 வீதப் பங்குகளை விற்பனை செய்துள்ளது. முதலீட்டாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைதான் இத்தாக்குதல்கள் என சந்தேகிக்கப்படுகிறது. (இ-21)

## சுட்டுக்கொலை

திருகோணமலையில் நேற்று முன்தினம் இரவு புளொட் உறுப்பினர் ஒருவர் இனம்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நிலாவெளியிலுள்ள அவரது வீட்டில் இடம் பெற்றது. (இ-21)

## புங்குடுதீவு...

(முதலாம் பக்கத் தொடர்)

ளிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்த நடைமுறை அமுல் செய்யப்படுவதாகவும் —

இந்த நடைமுறையை மீறுவோர் அதனால் ஏற்படும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டி வரும் என்றும்—

புங்குடுதீவில் வசிப்போருக்கு இந்த நடைமுறை பொருந்தாது என்றும் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மற்றும் ஒரு மின்மாற்றி தகர்ப்பு

கொழும்பு, ஜூன் 3

கொழும்பு கடவத்தையில் மற்றும் ஒரு மின்மாற்றி இனந்தெரியாத நபர்களினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

கடவத்தை இ. போ. ச. பஸ் டிப்போ அருகிலுள்ள அதிசக்தி வாய்ந்த மேற்படி மின்மாற்றி நேற்று அதிகாலை 4 30 மணியளவில் வெடித்துச் சிதறியது.

இரு வார காலத்தில் கடவத்தையில் மூன்று மின்மாற்றிகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டுள்ளன (இ-21)

## சினைப்பர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 3

கிளிநொச்சி முன்னரங்க நிலைகளில் இருந்து மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதலில் ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் உயிரிழந்தார் என்று பலாலி பாதுகாப்புத் தலைமையகத்தின் செய்திக் குறிப்புத் தெரிவித்தது. (இ-3)

## சூட்டுக்கு இலக்கான வயோதிப பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் பொலீஸாரால் கடந்த சனிக்கிழமை இரவு யாழ் ஆஸ்பத்திரியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் ஒப்படைக்கப்பட்ட பெண்ணின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

கொய்யாத்தோட்டம், பழையபூங்கா வீதியைச் சேர்ந்த சாம்பசிவம் சரஸ்வதி (வயது 47) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவர்.

இறந்தவரின் சடலத்தை அடையாளம் காட்டிய இறந்தவரின் கணவனின் சகோதரியான சண்முகராசா செல்வராணி (வயது 53) என்பவர் இதுபற்றித் தெரிவிக்கையில்,

இச்சம்பவத்தில் துப்பாக்கிச்சூட்டுக்கு உள்ளாகி மரணமான சரஸ்வதி 10 வருடங்களுக்கு மேலாக சித்தசுவாதீனமுற்றிருந்தவர் என்றும்

இவரது கணவன் அண்ணாமலை சாம்பசிவம் (வயது 48) மூன்று மாதங்களுக்கு முன் காணாமல் போய் விட்டார் எனவும்—

கணவர் காணாமற்போனதிலிருந்து தன்னுடன் வசித்து வந்த சரஸ்வதியும் அவரது இரண்டு குழந்தைகளும் வீட்டில் இருந்து சம்பவ தினம் பிற்பகல் 1-00 மணிக்குப் புறப்பட்டுப்பின் வீடு திரும்பவில்லை எனவும்—

பின்பு சரஸ்வதி மாத்திரம் ஆஸ்பத்திரியில் சடலமாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறார் என அறிந்து ஆஸ்பத்திரிக்குச் சென்று சடலத்தை அடையாளம் கண்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் இவருடன் கூடச் சென்ற இரு குழந்தைகளையும் இதுவரை காணவில்லை எனவும் தெரிவித்தார்.

மரண விசாரணையின்பின் சடலம் இவரிடம் கையளிக்கப்பட்டது. (இ-139-15)

## சிருடை..

(முதலாம் பக்கத் தொடர்)

10 முதல் 15 பேர் வரை கொண்ட குழுவே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அந்த வீதியால் சென்று கொண்டிருந்த ஏழு வாகனங்கள் வழி மறிக்கப்பட்டு, காட்டுக்குள் கொண்டுசெல்லப்பட்டுக் கொள்ளையிடப்பட்டு, பின்னர் எரிக்கப்பட்டதாகவும்தெரியவந்தது. வாகனங்களில் இருந்தவர்களை அக்குழு விடுவித்தது.

குளிரூட்டப்பட்ட பஸ் ஒன்று, லொறி ஒன்று, டிப்பர் மூன்று, டொல்பின் வாகனம் ஒன்று ஆகியனவே தீவைக்கப்பட்ட வாகனங்கள் ஆகும்.

இந்தத் தாக்குதல் சூத்திரதாரிகள் யார் என்பது குறித்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அந்தப் பிரதேசத்தில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். இ-3-10-21)


மங்கள வைபவங்களுக்கேற்ற
பட்டுப் புடைவைகளா?
இதோ!
**மகாநதி**யில்
இந்தியாவில் இருந்து பிரத்தியேகமாக
இறக்குமதி செய்யப்பட்ட
சுப முகூர்த்தப் பட்டுப் புடைவைகளும்
'BEST WAIST' டெனிம் ஜீன்ஸ் வகைகளும்
மற்றும்
விதவிதமான வர்ணங்களில் பற்பல தெரிவுகளுக்கும் சகல விதமான றேடிமெட் ஆடைகளுக்கும்
**மகாநதி**
**புடைவை அகம்.**
(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
4, நவீன சந்தை, சாவகச்சேரி.
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி/3899)



**MODERN EDUCATION CENTRE**
NELLIADY, KARAVEDDY.
**A/L 2000 இற்கான**
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன.
★ O/L பகல்நேர வகுப்புக்களும் ஆரம்பமாகி விட்டன
(எமது வழமையான ஆசிரியர் குழு)
SCIENCE CENTRE
NELLIADY, KARAVEDDY.
**A/L 2000 இற்கான**
கணித உயிரியல் வகுப்புக்கள்
உயிரியல் - திரு. கெங்காதரன்
இரசாயனவியல் - திரு. சிவத்திரன்
திரு. வசீகரன்
பௌதிகவியல் - திரு. குமரன்
தூய / பிரயோக ] கணிதம் திரு. வெக்ரர் வேலாயுதம்
திரு. கு கேசன்
★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(3912) - நிர்வாகி



யாழ். பல்கலைக்கழக வணிக
**மாணவர் மன்றத்தின்**
**'விருட்சம்'**
[புதிய தொகுதி - 3]
**சஞ்சிகை வெளியீட்டு விழா**
இடம்: கைலாசபதி கலையரங்கம்
காலம்: 03-06 1998 புதன் பிற்பகல் 2மணி
(புதிய நேரம்)
விழாவின் சிறப்புக்காக ஆர்வமுடையவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.
]56513]



**இராச இண்டஸ்றீஸ், சங்கானை.**
பல வருடங்களாகப் பயிற்சிப் புத்தகம் (MONITORS, EXERCISE BOOK) தயாரித்த மேற்படி நிறுவனத்தினர் மீண்டும் பயிற்சிப் புத்தகங்கள் தயாரிக்கின்றனர்.
★ பயிற்சிப் புத்தகங்கள் தயாரிக்கும் தொழில் தெரிந்தவர்கள் உடனடியாக வேலைக்குத் தேவை.
★ அச்செழுத்துகள், பேப்பர் வகைகள் விற்பனைக்குண்டு.
349, 351, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
அ. சேனாதிராசா
மாவியவத்தை, சங்கானை.
(56385)




இப்சனின்
ஒரு பாவையின் வீடு
- உரையிடை ஆற்றுகை -
04 - 06 - 98 அன்று நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வு, நடிகர் ஒருவர் சுகவீனமுற்ற காரணத்தினால்
16 - 06 - 98 செவ்வாய்க்கிழமைக்கு பிற்போடப்பட்டது.
ஏற்கனவே பதிவுசெய்து நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டவர்கள் அதனை அன்றைய தினம் பயன்படுத்த முடியும்.
- இயக்குநர்
நாடகஅரங்கக்கல்லூரி
(சி/3914)



BITSMANINSTITUTES BMI MANIPAY
**BITSMANS INSTITUTES**
**MANIPAY**
பிரிவு 2 **O/L DAY CLASS**
எமது தனித்துவமான "SUPER GRADE" ஆசிரிய குழு
★ கணிதம் ★ இரா. அருட்செல்வம் | ★ ஆங்கிலம் ★ M.A. HARI | ★ விஞ்ஞானம் ★ N. தேவா | ★ தமிழ் ★ N. பாலா | ★ சமயம் ★ தர்மா
★ சமூகக்கல்வி, வரலாறும் ★ N. ராஜன், கணேஷ் | ★ வர்த்தகம் ★ N. ராஜன் | ஆரம்பம்: 05 - 06 - 1998 வெள்ளி காலை 8.00 மணி
விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்யவும். (55426)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 3-6-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org